Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# Discipline of Thalaivi and the Forbidden Rights of Women in *Tholkappiyam*

**Dr. M. Durga Devi**, Assistant Professor of Tamil,
Sivanthi Arts and Science Women's College, Piraikudieruppu, Udankudi, Tuticorin District.
**ORCiD: https://orcid.org/0000-0002-1549-4942**
**DOI: 10.5281/zenodo.7312747**

## Abstract

*During Tolkappiyar's lifetime, women were denied to various rights. Also, it can be known through "Tholkappiyam" that a morality for men and a morality level for women have been followed. "Tholkappiyam" has laid down certain moral codes for the leader (Thalaivan). The very chief among them is the chastity of the leader, celibacy etc. Denial of rights such as not crossing the sea, climbing the mountain, and not speaking about one's pride in front of the leader is also possibly seen in the work. To explore this, "Tholkappiyam" has been chosen to decode how women are underprivileged of their basic rights.*

**Keywords:** *Tholkappiyam*, Thalaivi, Rights, Women, Suppression.

## References

[1] Yumbapoorananar (U.A). *Tholkappiyam Porulathikaram*, Sarada Publishing House, Chennai – 60014. First Edition May-2005
[2] Puliyurkasikan. *Kalithogai*. Sarada Publishing House, Chennai, First Edition: 2012

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# தொல்காப்பியத்தில் தலைவியின் ஒழுக்கமும் உரிமை மறுப்பும்

**முனைவர் மு. துர்காதேவி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சிவந்தி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, பிறைகுடியிருப்பு, உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம்.
**ORCiD: https://orcid.org/0000-0002-1549-4942**
**DOI: 10.5281/zenodo.7312747**

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியர் வாழ்ந்த காலக்கட்டத்தில் பெண்களுக்கென பல்வேறு உரிமைகள் மறுக்கபப்பட்டுள்ளன. மேலும், ஆண்களுக்கென ஒரு ஒழுக்கமும் பெண்களுக்கென ஒரு ஒழுக்க நிலையும் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையும் தொல்காப்பியம் வழி அறிய முடிகின்றது. தலைவிக்கென சில ஒழுக்க நெறிமுறைகளை தொல்காப்பியம் வகுத்துள்ளது. அவற்றுள் முதன்மையானவைகளாக தலைவியின் கற்பு நெறி, பிரிவாற்றாமை போன்றவை முன்மொழியப்படுகின்றது. கடல் கடந்து செல்லாமை, மடல் ஏறுதல், தலைவன் முன் தன் பெருமையினை எடுத்துப் பேசாமை, போன்ற உரிமை மறுப்பினையும் இயம்புகின்றது. இதனை ஆராய்வதாய் தொல்காப்பியத்தில் தலைவியின் ஒழுக்கமும் உரிமை மறுப்பும் என்ற ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**திறவுகோல்:** *தொல்காப்பியம்*, கற்பு, ஒழுக்கம், அறம்.

**முன்னுரை**

தொல்காப்பியர் காலத்தில் பெண்களுக்கென்று வரையறைகள் இருந்ததை அவர் எழுதிய நூலின் மூலம் அறிய முடிகின்றது. பெண்களை விட ஆண்களின் ஆதிக்கம் தான் மேலோங்கி உள்ளது. பெண்கள் தங்களின் உள்ள உணர்வுகளை விட வெளிப்படையாகக் கூறும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது எனலாம். தொல்காப்பியர், அச்சம், நாணம், அறியாமை இம்மூன்றும் பெண்களுக்கு உரியவை என்கிறார். இதன் மூலம் பெண்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்த நிலையினை உணர முடிகின்றது. தொல்காப்பியத்தில் தலைவியின் ஒழுக்கம், கற்புநிலை, உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை இவற்றை விளக்குவதால் இக்கட்டுரை அமைகின்றது.

**தலைவியின் ஒழுக்கம்**

காமப்பருவம் எய்திய இளம் பெண்ணும், ஆணும் ஒருவரை ஒருவர் சந்தித்து கண்களால் நட்புறவு கொள்கின்றனர். கண்களாலே தங்கள் காதலை வெளிப்படுத்துகின்றனர். இதனை,

**நாட்டம் இரண்டும் அறிவுடம்படுத்தற்குக்**

**கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும் (தொல். களவு., 5)**

என்கிறார் தொல்காப்பியர்.

அறிவுடம்படுதல் என்பது இருவரது அறிவினையும் ஒன்றுபடுத்துதல் என்று குறிப்பர். தலைவன் தன் வேட்கையை வெளிப்படுத்தினாலும், தலைவி மௌனத்தாலே சம்மதம் தெரிவிக்கும் நிலை உள்ளது. தன் விருப்பத்தை வெளிப்படையாக கூறுவதற்குக் கூட உரிமை இல்லாத நிலையில் இருக்கின்றனர்.

**கற்புநெறி:**

'கற்பு' என்பது பெண்ணுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. தலைவன், தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் சென்று பின் தலைவியிடம் வரும்போது அவள் ஏற்றுக் கொள்கிறாள்.

**தாய் போல் கழறித் தழூஇக் கோடல்**
**ஆய்வினைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப**
**கவவொடு மயங்கிய காலையான (கற்பு., 32)**

என்கிறார் தொல்காப்பியர். தலைவன் செய்தவற்றை சுட்டிகாட்டி அவனை ஏற்றுக் கொள்ளும் நிலை உள்ளது.

**தன்னைப் புகழ்தல்**

தலைவனிடம் தன் பெருமைகளைக் கூறும் நிலை தலைவிக்கு இல்லை, இதனை,

**துறபுகழ்க் கிளவி கிழவன் முன் கிளத்தல்**
**எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை (தொல். கற்பு., 39)**

என்று தொல்காப்பிய நூற்பா இயம்புகின்றது.

தலைவன் பரத்தையிடம் இருந்து பிரிந்து வந்த போது இரத்தல், தெளித்தல் என்ற இரண்டிலும் தான் தன்னைப் புகழ்தல் உண்டு. தலைவன் முன் தாழ்மையாகவே இருக்க கருதுகின்ற சூழல் உள்ளது. தன் பெருமையைக் கூறுதல் மரபாகவே இல்லை. இதனை,

**நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினு**
**யார்மேல் விளியுமோ கூறு (கலித்தொகை, 88)**

என்று கலித்தொகையும் எடுத்து இயம்புகின்றது.

**பணிவான மொழி**

தலைவன் அன்புமிக்க காலத்து மட்டுமே தலைவியிடம் பணிவான மொழி பேசுகிறான். தலைவனை வழிபடுதல் தலைவிக்கு இயல்பாக இருக்கிறது என்கிறார்.

**காமக் கடப்பினும் பணிந்த கிளவி**
**காணுங் கிழவோற்க உரித்தே**
**வழிபடு கிழமை அவட்கியலான (தொல். கற்பு., 19)**

என்று கூறுகிறார். தலைவன் தவறான வழியில் சென்று வரினும் அதனால் சினம் கொள்ளாது. அவனைப் பணிந்து செல்கிறார். பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டாலும் அவர்களின் பணிந்த மொழியில் தணிந்து ஏற்று கொள்ளும் நிலை இன்றைய சூழலிலும் உள்ளது.

தலைவன் பேச்சுக்கு மறுப்பாக தலைவி பேசியதாக கூறும் இடமே இல்லை. தலைவி தன் விருப்பத்தைக் குறிப்பால் மட்டுமே உணர்த்தியுள்ளார். இதனை,

**சொல் எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்**
**அல்ல கூற்றுமொழி அவள் வயினான் (தொல். களவு., 20)**

என்று தொல்காப்பியர் இயம்புகிறார்.

**களவு வெளிப்படும் நிலை**

'களவு' இரண்டு வகையில் வெளிப்படுகிறது. ஒன்று தலைவன், தலைவியை அலர் தூற்றும் போது, மற்றொன்று தலைவிக்கு வேறு இடத்தில் மணம் முடிக்க இருக்க நிலையிலும் வெளிப்படுகிறது. அவர் தூற்றும் நிலை தலைவனாலே வருகிறது. தலைவன் தான் தலைவியை வந்து சந்திக்கும் நிலை உள்ளது. தலைவனைத் தேடி தலைவி செல்லும் நிலை இல்லை என்பதனை,

**ஆங்காங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டே**
**ஓங்கிய சிறப்பின் ஒரு சிறையான (தொல். களவு., 42)**

என்ற நூற்பா வழி அறிய முடிகின்றது.

**பிரிவு நிலை**

தலைவன் பொருள் தேட தலைவியை விட்டு பிரியும் நிலை இருந்துள்ளது. இதனை,

**பொருள் வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே**
**உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான் (தொல். அகம்., 33)**

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். திருமணத்திற்கு பின்னரும் தலைவியை தன்னோடு கடல் கடந்து செல்லும் பயணத்தில் அழைத்துச் செல்வதில்லை. இதனை, **முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை (தொல். அகம்: 34)** என்கிறார். பெண்கள் நிலம் விட்டு நிலம் சென்றால் அங்கே நிலவும் பண்பாடு நாகரிகத்தை மேற்கொள்ளும் நிலை உருவாகிவிடும். எனவே, தமிழ்ப் பண்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விடுதல் சிறப்பன்று என்ற காரணத்தினால் பெண்களை அனுமதிக்கவில்லை. அக்காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே செல்வது இல்லை. இதற்கெல்லாம் ஆனாதிக்கம் தான் காரணம். இன்றைய சூழலிலும் ஆண்கள் வெளிநாட்டிற்கு பணிபுரியச் செல்கின்றனர். தன்னோடு மனைவியை அழைத்துச் செல்லுதல் மிகவும் குறைவாக ஒரு சில இடங்களிலே நடைபெறுகிறது.

**மடல் ஏறுதல்**

தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைவதற்காக மடல் ஏறுதல் வழக்கம், அக்காலத்தில் இருந்த இவ்வழக்கத்தினை,

**ஐந்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான (தொல். அகம்., 35)**

என்கிறார். இருப்பினும் அது ஒழுக்கக் குறைவாகக் கருதப்பட்டது. தொல்காப்பியர் காலத்தில் ஆண் சமூகம் பெண்ணுக்காக வரையறைகளை கடுமையாகவே வைத்துள்ளது. ஆண் தான் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள ஏற்பட்ட தடையை நீக்குவதற்காக அப்பெண்ணின் உருவ படத்தை வரைந்து பனைமரத்தின் கருக்கு மட்டையால் ஒரு குதிரை

செய்து அதன் மேல் ஏறி வலம் வருகிறான். இதில் தலைவனது உண்மையான காதல் வெளிப்பட்டாலும் அவளின் உருவப்படத்தை பார்த்த பின்னர் எவரும் திருமணம் செய்து கொள்ள முன் வரமாட்டார்கள். ஆனால் தான் விரும்பிய தலைவன் கிடைக்காவிட்டால் 'மடல் ஏறுதல்' தலைவிக்கு ஒழுக்கமற்றதாகக் கருதப்பட்டது.

**களவில் தலைவியின் நிலை**

களவுக் காலத்தில் தலைவி, தலைவனிடம் நேரடியாகப் பேசுவது மிக குறைவுதான். தலைவி தனக்கு ஏற்பட்ட வேட்கையை வெளிப்படையாகக் கூறுவது மரபு இல்லை.

**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**
**பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப (தொல். களவு., 27)**

என்ற நூற்பா வழி தலைவி தன் வேட்கையை குறிப்பாக உணர்த்துவதாக குறிப்பிடுகிறார்.

**பெண் அறம்**

தொல்காப்பியர் கூறும் பெண் குறிப்பிட்ட எல்லைக்குள் வரையறுத்துக் கூறலாம்.

- பெண்ணானவள் கணவனையே கண் கண்ட தெய்வமாகப் போற்ற வேண்டும்.
- உயிரை விட கற்பையே பேணிப் பாதுகாக்க வேண்டும்.
- பொருள் தேடும் உரிமை பெண்ணுக்கு உரியதன்று.
- தான் விரும்பிய தலைவனை வெளிப்படுத்தும் உரிமை பெண்ணுக்கு இல்லை.
- பெண்கள் உணவை சுருக்கி உண்ணுதல் வேண்டும்.
- பிரிவுத் துன்பம் ஆணுக்குரியதன்று. அது பெண்ணுக்கு மட்டுமே உரியது.
- தலைவன் பரத்தையோடு மகிழ்ந்திருக்கலாம். பரத்தமை காரணமாகப் பிரிந்த அத்தலைவனை நினைத்து தலைவி கண்ணீர் வடிக்க வேண்டும்.

**ஒழுக்க மீறல்கள்**

தொல்காப்பியரின் ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற விதி இயல்பாக மீறியுள்ளதை அறிய முடிகிறது.

**யாறும் குளமும் காவும் ஆடி**
**பதிஇகத்து நுகாதறும் உரிய என்ப (தொல். கற்பு., 50)**

எனும் நூற்பாவில் தலைவன் தலைவியுடனும், காமக் கிழத்தியருடனும் நகரம் கடந்து சென்று ஆற்றினும், குளத்திலும் நீராடி மகிழ்தலும் உண்டு என்று தொல்காப்பியர் கூறுகிறார். ஒழுக்கம் என்பது பெண்களை மட்டுமே சார்ந்தது. ஆணுக்கு எவ்வித பங்கும் கிடையாது என்று காட்டும் விதமாக அமைந்துள்ளது.

**திருமண உரிமை**

தொல்காப்பியச் சமூகப் பெண்களின் மன உணர்வுகளைத் திருமணங்கள் வழியாக ஒடுக்குவதைக் காண முடிகின்றது. தொல்காப்பியர் எண் வகை மணங்களை,

**மறையோர் தோத்து மன்றல் எட்டனுள்**
**துறைமை நாயாழ்த் துணைமையோர் இயல்பே (தொல். களவு., 1)**

என்று காட்டுகிறார். இந்த எண்வகை மணங்களுமே பெண்களை அடிமைப்படுத்தும் விதமாகவே அமைகிறது. பெண்களின் விருப்பமின்றி ஆணுக்குத் தகுந்தவாறு மணம் புரியும் நிலை இருந்துள்ளது.

அசுரம் என்பது கொல்லும் இயல்பினை உடைய எருதினை அடக்கியவன் இப்பெண்ணை மணப்பதற்கு உரியவன். இராக்கதம் என்பது தான் விரும்பிய பெண்ணை அவள் சுற்றத்தார்க்கும், அவள் விருப்பத்திற்கும் மாறாக வலிதிற் கவர்ந்து மணம் கொள்வதாகும். பிரமம் என்பது நாற்பது ஆண்டுகள் பிரம்மசரிய விரம் மேற்கொண்டானுக்கு கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர் கொடுப்பது. பிராசபத்தியம் தலைவனின் பெற்றோர் வேண்டத் தலைவியின் பெற்றோர் மறுக்காது உடன்பட்டுத் தலைவியை அலங்கரித்துத் தீ முன்னர் கொடுப்பது. ஆரிடம் ஒன்றோ இரண்டோ பசுவும், காளையும் வாங்கிக் கொண்டு வேள்வி ஆரியனுக்குத் தீ முன்னர் கொடுப்பது. தெய்வம் வேள்வி ஆசிரியனுக்குக் துன்றியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. பைசாசம் மூத்தவள் மாட்டும், துயின்றோர் மாட்டும், கரித்தோர் மாட்டும் சென்று கற்பினை அழிப்பது.

திருமணம் என்பது ஒத்த அன்பினை உடையவர்கள் மன விருப்பத்துடன் இணைவதாகும். ஆனால் எட்டு வகை திருமணத்துள் கந்தர்வம் தவிர பிற அனைத்தும் பெண்ணின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களை ஒடுக்குவதாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

**அடிப்படை உரிமையை இழத்தல்**

மனிதன் உயிர் வாழ அடிப்படை ஆதாரமாக இருப்பது உணவு. இதில் கூட பெண்கள் பாரபட்சமாய் நடத்தப்பட்டதைத் தொல்காப்பியர் சமூகம் உணர்த்துகிறது. இதனை,

**நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**
**செய்வினை மறைப்பினும் (தொல். களவு., 24)**

என்று கூறியுள்ளார். தலைவியானவள் களவுக் காலத்தில் தலைவனையே நினைத்து உண்ணும் உணவைக் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்கிறார். மேலும், தலைவி, தலைவனைப் பிரியும் சூழலில் அவனை எண்ணியே வாழும் நிலை இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

தலைவியின் ஒழுக்க நிலை, குணச்சிறப்பு, பொறுமை குணம், தலைவியின் உரிமைகள் ஏற்கப்படும் இடமும் மறுக்கப்படுகின்ற இடமும் தலைவனின் பண்புகள் மேலோங்கி தலைவி கீழான இடத்திற்கு தள்ளப்படுவது போன்றவற்றைத் தொல்காப்பியர் எவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை இவ்வாய்வுக் கட்டுரை வழி அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1] இளம்பூரணனார் (உ.ஆ). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம், சென்னை –

60014. முதற்பதிப்பு மே-2005.
[2] புலியூர்க்கேசிகன். *கலித்தொகை*. சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2012.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.